

தமிழர் திருநாள் பொங்கல் விழாவையொட்டி, தமிழர்களின் கலைத் திறனைக் காட்டும் பாரம்பரியக் கலைகள் அரங்கேறும் ‘சென்னை சங்கமம் – 2026’ நிகழ்வுக்கான அழைப்பிதழை கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம், நேற்று முன்தினம் அவரது இல்லத்தில், கழக துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.1.2026) முகாம் அலுவலகத்தில், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், 2025–ஆம் ஆண்டுக்கான “பேரறிஞர் அண்ணா விருது” அறிவித்தமைக்காக சந்தித்தபோது, முதலமைச்சர் அவர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

### 2025ஆம் ஆண்டுக்கான இலக்கிய மாமணி விருது

# மரபுத்தமிழ் - ஆய்வுத் தமிழ் - படைப்புத்தமிழ் - மூன்று விருதுகள்!

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜன.15 -**

**பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமையோடு இலங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தொண்டாற்றிடும் தமிழ்த் தாயின் அறிஞர் பெருமக்களுக்குத் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் வழங்கி, அவர்தம் புலமைக்கும் தொண்டுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது.**

அவ்வகையில் மரபுத்தமிழ், ஆய்வுத்தமிழ், படைப்புத் தமிழ் ஆகிய மூன்று வகைப்பாட்டில் அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் உயரிய விருதான இலக்கிய மாமணி விருது வழங்கப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி 3.6.2021 அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால், தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் இலக்கிய மாமணி என்ற விருது உருவாக்கப்பட்டு தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் மூன்று அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, மரபுத்தமிழ், ஆய்வுத் தமிழ், படைப்புத்தமிழ் ஆகிய வகைப்பாட்டில் 2021ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வரிசையில், **2025ஆம் ஆண்டிற்கான இலக்கிய மாமணி விருதுகளில் மரபுத் தமிழ் வகைப்பாட்டில்** ”உலகின் பல்வேறு நாடுகளில் செம்மாந்த இலக்கிய உரைகளை நிகழ்த்தி வருபவரும் தினமணி நாளிதழில் ஞாயிறு தோறும் கம்பன் தமிழமுதம் என்னும் தலைப்பில் ஆழ்ந்த கட்டுரைகள் எழுதியதோடு தொடர்ந்து பல்வேறு இதழ்களில் எழுதி வருபவரும் தமிழ்நாட்டில் பல இளைஞர்களுக்கு மேடைப் பேச்சாற்றலுக்கான நல்வழிகாட்டியாகவும் உந்து சக்தியாகவும் திகழ்ந்து வருபவரும் சென்னை, கம்பன் கழகத்தில் செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றிய வரும் மாபெரும் தமிழறிஞர்களின் வழிகாட்டுதல்களோடு இலக்கியப்பணியாற்றி வரும் **இலக்கியச் சுடர் த. இராமலிங்கம் (வயது 68)** அவர்களும்;

ஆய்வுத் தமிழ் வகைப்பாட்டில் இலக்கியப் பேராசான் ஜீவானந்தம் அவர்களால் 1959இல் தொடங்கப்பட்ட தாமரை இலக்கிய இதழின் ஆசிரியராக கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றியவரும், இந்திய கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரும், சமூக விழிப்பு கொண்ட எழுத்துப் பணிகளை மேற்கொண்டு வருபவரும், சீர்திருத்த மேடைப் பேச்சாளராக அணி செய்பவரும், “வீழ்வேன் என்று நினைத்தாயோ?, “தீக்குள் விரலை வைத்தேன்”, தமிழ்நாடு பிறந்தது (தொகுப்பு)” உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவருமான எழுத்தாளர் **சி.மகேந்திரன் (வயது 73)** அவர்களும்;

**படைப்புத்தமிழ் வகைப்பாட்டில்** முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆசிரியராக இருந்த ‘நம்நாடு’ வார ஏட்டில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதியதோடு, வைகறை முரசு இதழில் தொடர்ந்து எழுதியவரும் தென்காசி திருவள்ளுவர் கழகத்தில் வள்ளுவம் தொடர்பான தொடர் சொற்பொழிவுகளை ஆற்றி வருபவரும், திராவிடச் சிந்தனையில் ஆழ்ந்து பல படைப்பு நூல்களை வெளியிட்டதோடு, தமிழ்நாட்டில் இருந்து பல்வேறு அறிஞர்களை அழைத்து இராசபாளையத்தில் அருமையான இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்துவதை தொடர் பணியாக செய்யும் அறிவுத்திலகமான விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த **இரா.நரேந்திரகுமார் (வயது 74)** அவர்களும் தெரிவு செய்யப் பெற்றுள்ளனர். இலக்கிய மாமணி விருது பெறும் விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ரூபாய் ஐந்து இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை ஆகியவை வழங்கப்பெற்று, பொன்னாடை அணிவித்து சிறப்பிக்கப்பெறுவார்கள்.

இவ்விருதுகள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் திருவள்ளுவர் திருநாளான 16.01.2026 அன்று வழங்கப்படவுள்ளன.




முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நேற்று முன்தினம் (13.01.2026) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம், அஸ்தம்பட்டியில் ரூ.103.9 கோடி மதிப்பீட்டில் பொதுமக்கள் மற்றும் போட்டித் தேர்வு எழுதிடும் மாணவர்கள் பயன்பெறும் விதமாக “பாரதிதாசன் அறிவுலகம்” நூலகம் அமைக்க கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்கள். உடன் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் எஸ்.பாலரவிக்குமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் எஸ்.தியாகராஜன் ஆகியோர் உள்ளனர்.





நான் முதல்வன் திட்ட மாணவர்களுக்கு பாராட்டு விழா!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர்

உயர்திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர்

உயர்திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின்

கனவுத் திட்டங்களில் ஒன்றான

‘நான் முதல்வன்’

உயர்கல்வி வழிகாட்டி திட்டத்தின் மூலம் அரசுப்பள்ளிகளில் பயின்று பொறியியல், மருத்துவம், வேளாண்மை மற்றும் சட்டப்படிப்புகளுக்கு தேர்வு செய்யப்பட்டு பயின்று வரும் திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுவிழா நடத்தி, நினைவுப் பரிசு வழங்கிய



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முத்தூர் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு முன்னாள் மாணவர் என்ற முறையில் மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் சிலை வழங்கி, அதை திறந்து வைத்து சிறப்பித்தமைக்கு நன்றி! நன்றி!!

தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்
கழக துணைப் பொதுச் செயலாளர்

மு.பெ.சாமிநாதன் அவர்களுக்கும்,

விழா சிறக்க உறுதுணையாக இருந்த

திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர்

இல.பத்மநாபன் அவர்களுக்கும்

நன்றி! நன்றி!!

ஜி.குகன்
மாவட்ட கழக மாணவர் அணி அமைப்பாளர்

எஸ்.சிலம்பரசன், ஜி.சிவராஜ், சி.சோபனா, பி.அருண்மொழி, எஸ்.மேகநாதன்
மாவட்ட கழக மாணவர் அணி துணை அமைப்பாளர்கள்

திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி